18.07.2016

தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மேட்டூர் அணைக்கு நீர்வரத்து அதிகரிப்பு

காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் பெய்துவரும் தொடர்மழையின் காரணமாக மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 13,435 கன அடியாக அதிகரித்துள்ளது.

சனிக்கிழமை காலை அணைக்கு நீர்வரத்து நொடிக்கு 10,148 கன அடியாக இருந்தது. இது ஞாயிற்றுக்கிழமை காலை நொடிக்கு 13,435 கனஅடியாக அதிகரித்துள்ளது. மேட்டூர் அணைக்கு நீர்வரத்து நாளுக்கு நாள் அதிகரித்து வருவதால் வெள்ளிக்கிழமை காலை 48.10 அடியாக இருந்த மேட்டூர் அணையின் நீர்மட்டம் ஞாயிற்றுக்கிழமை காலை 50.78 அடியாக உயர்ந்துள்ளது.

கடந்த இரண்டு நாள்களில் மட்டும் மேட்டூர் அணையின் நீர்மட்டம் 2.68 அடி உயர்ந்துள்ளது. அணையிலிருந்து குடிநீர்த் தேவைக்கு நொடிக்கு 2 ஆயிரம் கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 18.30 டி.எம்.சி.யாக இருந்தது.

### நாமக்கல் மாவட்டத்தில் 827 கிலோ கொப்பரை கொள்முதல்

நாமக்கல் மாவட்டத்தில் கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் 827 கிலோ கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சியர் வி.தட்சிணாமூர்த்தி தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

விவசாயிகளிடமிருந்து கொப்பரைத் தேங்காயினைக் கொள்முதல் செய்ய கொப்பரைக் கொள்முதல் திட்டம் கடந்த மாதம் 15-ஆம் தேதி தொடங்கப்பட்டது. நாமக்கல் மாவட்டத்தில் திருச்செங்கோடு வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க கொள்முதல் மையம் மல்லசமுத்திரத்திலும், நாமக்கல்

வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க கொள்முதல் மையம் பரமத்தி வேலூரிலும், ராசிபுரம் வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்க கொள்முதல் மையம் ராசிபுரத்திலும் செயல்பட்டு வருகின்றன.

கொப்பரை வைத்துள்ள தென்னை விவசாயி, கிராம நிர்வாக அலுவலர் மற்றும் வேளாண்மைத் துறை அலுவலர் மூலம் தென்னை விவசாயி என்ற சான்றிதழைப் பெற்று அவர்களுக்கான கொள்முதல் மையத்தில் ஒரு நாளைக்கு ரூ.2,500 கிலோ வரை கொப்பரையை விற்பனை செய்யலாம்.

மல்லசமுத்திரம் கொள்முதல் மையம் சனிக்கிழமை, பரமத்திவேலூர் கொள்முதல் மையம் செவ்வாய்க்கிழமை, ராசிபுரம் மையம் வெள்ளிக்கிழமையும் நடைபெற்று வருகின்றன. காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை கொள்முதல் செய்யப்படும்.

இம் மையங்களில் அரசு ஆதரவு விலையாக ஒரு கிலோ அரவைக்

கொப்பரைக்கு ரூ.59.50-ம், ஒரு கிலோ பந்துக் கொப்பரைக்கு ரூ.62.40-ம் வழங்கப்பட்டு வருகின்றன. நாமக்கல் மாவட்டத்தில் இதுவரை ரூ.49,000 மதிப்புள்ள 827 கிலோ கொப்பரை தேங்காயை விவசாயிகள் இந்தக் கூட்டுறவு விற்பனைச் சங்கங்களில் விற்று பயன் பெற்றுள்ளனர்.

கொப்பரை விற்பனை செய்த விவசாயிகளுக்கு விற்பனைத் தொகை மூன்று நாள்களுக்குள் காசோலை அல்லது மின்னணு நிதி பரிமாற்றம் மூலம் வழங்கப்பட்டு வருகிறது. இத் திட்டம் 180 நாள்களுக்கு அதாவது 2017-ஆம் ஆண்டு பிப்ரவரி மாதம் 10-ஆம் தேதி வரை செயல்பாட்டில் இருக்கும்.

இதனால், நாமக்கல் மாவட்டத்தில் உள்ள தென்னை விவசாயிகள், கொள்முதல் மையங்களில் அரசின் ஆதரவு விலை திட்டத்தின் கீழ் கொப்பரையை விற்பனை செய்து பயனடையலாம்.

## விருவீடு பகுதியில் வறட்சி: தார்பாய் விரித்து தண்ணீர் பாய்ச்சும் விவசாயிகள்

திண்டுக்கல் மாவட்டம் விருவீடு பகுதியில் விவசாயிகள் தங்கள் நிலங்களில் பள்ளம் தோண்டி தார்பாய் விரித்து பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்சுகின்றனர்.

சுமார் 50-க்கும் மேற்பட்ட கிராமப்பகுதி விவசாயிகள் தங்கள் நிலங்களில் முருங்கை,அவரை,தக்காளி,கத்திரிக்காய்,வெண்டைக்காய் போன்ற காய்கறி மற்றும் பூ விவசாயம் செய்துள்ளனர்.

போதிய மழை இல்லாததால் இப்பகுதியில் நிலத்தடி நீர் மட்டம் மிகவும் குறைந்துள்ளது. இதனால் விவசாய நிலங்களில் ஆழ்துளைக்கிணறுகளிலுள்ள நீரை மின் மோட்டார் மூலம் இறைத்து, தங்கள் விவசாய நிலங்களில் தொட்டி போல் பெரிய பள்ளம் அமைத்து நிலத்தில் நீர் உறிஞ்சாத வகையில் அப்பள்ளத்தின்மீது தார்பாய் விரித்து தண்ணீரை நிரப்பி பயிர்களுக்கு பாய்ச்சுகின்றனர்.

கிணற்றில் இறைத்து தண்ணீர் பாய்ச்சுவதால் கடும் வெயிலில் வறண்ட நிலத்தின் வழியாக தண்ணீர் வழிந்தோடும் போது அதை நிலமே உறிஞ்சி விடுவதாக விவசாயிகள் தெரிவித்துள்ளனர்.

இதுகுறித்து சென்மார்பட்டியைச் சேர்ந்த விவசாயி சேகர் கூறியதாவது: விருவீடு சுற்றி நடகோட்டை, அக்கரைபட்டி, செக்காபட்டி, விராலிமாயன்பட்டி,மீனாட்சிபுரம்,தெப்பத்துபட்டி,கீழாச்சனம்பட்டி,மேல அச்சனம்பட்டி, சந்தயூர்,ராஜதானியகோட்டை உள்ளிட்ட 50 க்கும் மேற்பட்ட கிராமங்கள் உள்ளன. இப்பகுதி மக்கள் பெரும்பாலும் விவசாயத்தையே நம்பியுள்ளனர்.

இப்பகுதியில் 10 க்கும் மேற்பட்ட கண்மாய்கள் உள்ளன. இவை அனைத்தும் மழைக்காலங்களிலும் வறண்டே காணப்படுகின்றன. இப்பகுதியில் 58 ஆம் கால்வாய் திட்டப்பணி நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

அத்திட்டம் முடிந்தால் இப்பகுதி கண்மாய்கள் மழைக்காலங்களில் நிரம்பும். தண்ணீர் பற்றாக்குறையால் விவசாயிகள் பலர் வாழ்வாதாரம் தேடி திருப்பூர்,கோவை,ஈரோடு,சென்னை,மதுரை போன்ற நகரங்களுக்கு கூலி வேலைக்காக செல்கின்றனர்.

விவசாயத்தை பாதுகாக்க சிலர் லாரிகளில் தண்ணீர் வாங்கியும்,ஆழ்துளைக்கிணற்றில் நீர் இறைத்து, பள்ளத்தில் விரித்த தார்பாயில் தண்ணீர் நிரப்பி பயிர்களுக்கு நீர் பாய்ச்சுகின்றனர் என்றார்.

## மாடித் தோட்டம் அமைப்பது குறித்த விழிப்புணர்வு முகாம்

பொன்னேரியை அடுத்த அனுப்பம்பட்டில், மாடித் தோட்டம் அமைப்பது குறித்த விழிப்புணர்வு முகாம் அண்மையில் நடைபெற்றது.

அனுப்பம்பட்டு ஊராட்சியில் 500-க்கும் மேற்பட்ட குடியிருப்புகளில் 5 ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் வசித்து வருகின்றனர். இந்நிலையில், ஊராட்சித் தலைவி உமா மகேஸ்வரன் ரூ.1 லட்சம் செலவில் அனைத்து குடியிருப்புகளிலும் காய்கறித் தோட்டம் அமைப்பதற்காக விதைகளையும், செடிகளையும் வழங்கினார்.

இதுதொடர்பான விழிப்புணர்வு முகாம் அனுப்பம்பட்டில் நடைபெற்றது. முகாமுக்கு உமா மகேஸ்வரன் தலைமை வகித்தார். இதில், மீஞ்சூர் ஒன்றிய தோட்டக்கலைத் துறை உதவி இயக்குநர் அபிபுல்லா உள்ளிட்டோர் கலந்துகொண்டு, மாடித் தோட்டம் அமைப்பது குறித்து விளக்கினர்.

## "அம்மா' நெல் விதை விநியோகத் திட்டம் தொடக்கம்

திருவள்ளூர் ஒன்றியத்தில் "அம்மா' நெல் விதை விநியோகத் திட்டத்தை மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி தொடக்கி வைத்தார்.

திருவள்ளூர் ஒன்றியத்துக்கு உள்பட்ட வேளாண்மை விரிவாக்க மையத்தில், நெல் சம்பா முன்பருவ விவசாயிகள் பயிற்சி முகாம், "அம்மா' நெல் விதை விநியோகத் திட்ட தொடக்க விழா அண்மையில் நடைபெற்றது.

விழாவுக்கு ஒன்றியக்குழு பெருந்தலைவர் புட்லூர் ஆர்.சந்திரசேகர் தலைமை வகித்தார். பயிற்சி முகாம், "அம்மா' நெல் விதை விநியோக திட்டத்தை மாவட்ட ஆட்சியர் எ.சுந்தரவல்லி தொடக்கி வைத்துப் பேசியதாவது:

நெல் சம்பா முன்பருவ பயிற்சி முகாமில் கூறப்படும் தகவல்களை அறிந்து கொண்டு, விவசாயிகள் பயிரிடுதல் ஒரு சிறந்த முறையாகும். திருவள்ளூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு பல சிறப்பு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. மொத்தம் 98,000 ஹெக்டேர் நிலப்பரப்பில் விவசாயம் செய்யப்பட்டு

வருகிறது. இதற்குத் தேவையான மானியம், ஊக்கத்தொகையை அரசு வழங்குகிறது. உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் சேர்ந்து விவசாயிகள் பயனடைய வேண்டும். அவர்களின் வாரிசுகளின் பட்டம், பட்டயப் படிப்புகளுக்கு அரசு ஊக்கத்தொகை வழங்குகிறது. தொழில் நுட்ப, மருத்துவ படிப்புகளுக்கும் இது பொருந்தும். மேலும், விவசாயிகளின் வாழ்வாதாரமான கால்நடைகளை பாதுகாக்க, காப்பீட்டுத் திட்டங்களும் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இயற்கை இடர்பாடு, விபத்தில் உயிரிழக்கும் கால்நடைகளுக்கு காப்பீடு மூலம் உரிய இழப்பீடு வழங்கப்படும். கால்நடை காப்பீட்டுத் திட்டத்தில் சேர இதர பிரிவினருக்கு ரூ.250-ம், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் ரூ.150 செலுத்தினால் மீதமுள்ள தொகையை அரசு மானியத்துடன் காப்பீட்டு சந்தா செலுத்தப்படும். இதனால், விவசாயிகளின் வாழ்வாதாரம் மேம்படும். எனவே, விவசாயிகள் அனைவரும் அரசின் அனைத்து திட்டங்களையும் அறிந்து அவற்றை பயன்படுத்த வேண்டும் என்றார்.

இந்நிகழ்ச்சியில் பூந்தமல்லி எம்எல்ஏ டி.ஏ.ஏழுமலை, திருவள்ளூர் கோட்டாட்சியர் ஜெயச்சந்திரன், வேளாண்மை இணை இயக்குநர் முருகவேல் உள்பட பலர் பங்கேற்றனர்.

## மதுரையில் ஒரே நாளில் 65 மி.மீட்டர் மழை பதிவு

மதுரையில் சனிக்கிழமை மாலையில் 65 மில்லி மீட்டர் மழை பதிவாகியுள்ளது.

மதுரை மாவட்டத்தில் சனிக்கிழமை பெய்த மழை அளவு விவரம்: (மில்லி மீட்டரில்) கள்ளந்திரி- 75, மேட்டுப்பட்டி- 50, சிட்டம்பட்டி- 20, சாத்தையாறு அணை- 19, விரகனூர்- 20, வாடிப்பட்டி ஆண்டிபட்டி பங்களா பகுதி- 22 என பதிவாகியுள்ளது.

சாலைகள் சேதம்: மதுரையில் சனிக்கிழமை மாலையில் 2 மணி நேரம் காற்றுடன் பலத்த மழை பெய்தது. இதில் தல்லாகுளம் பகுதியில் தான் அதிகமான மழை பெய்துள்ளதாக பொதுப்பணித்துறை அதிகாரிகள் கூறினர். மதுரையில் 65 மி.மீட்டர் மழை பதிவாகி இருந்தது.

கனகவேல் காலனி பகுதியில் சாலையில் தேங்கிய தண்ணீர் பள்ளமாக இருந்த வீடுகளுக்குள் புகுந்தது. தனியார் பள்ளிகளைச் சுற்றிலும் மழைநீர் சேருடன்

தேங்கியுள்ளது. பலத்த மழையால் தத்தனேரி ரயில் சுரங்கப் பாதையில் இடுப்பளவுக்கு தண்ணீர் தேங்கிக் கிடக்கிறது. அதை அகற்ற ரயில்வே மற்றும் மாநகராட்சி நடவடிக்கை எடுக்காததால் ஞாயிற்றுக்கிழமை அதில் போக்குவரத்து நடைபெறவில்லை.

ராஜா மில் பாலத்தின் இருபுறமும் மழைநீர் சகதியுடன் தேங்கியதால் வாகன ஓட்டிகள் அவதியடைந்தனர். இதே போல அனைத்து சாலைகளிலும் தண்ணீர் தேங்கி சேறும், சகதியுமாக உள்ளது.

## உழவர்கள், தொழில் முனைவோருக்கு ஜூலை 22இல் வேளாண் தொழில் நுட்ப பயிற்சி

பசுமலை மன்னர் திருமலை நாயக்கர் கல்லூரியில் உழவர்- தொழில் முனைவோருக்கு வேளாண்மை தொழில் நுட்பம் பயிற்றுவிக்கும் பயிற்சி ஜூலை 22 ஆம் தேதி நடைபெறவுள்ளது.

இதுகுறித்து நாட்டுநலப் பணித் திட்ட அலுவலர் சுரேஷ்பாபு வெளியிட்டுள்ள அறிக்கை: மன்னர் கல்லூரி நாட்டு நலப்பணித் திட்ட அணி மற்றும் தமிழ்நாடு அரசு வேளாண்மை துறை சார்பில் வெள்ளிக்கிழமை (ஜூலை 22) காலை 9.30 மணிக்கு தொடங்கி பிற்பகல் 1.30 மணி வரை வேளாண்மையில் நவீன தொழில் நுட்பம் குறித்த பயிலரங்கம் நடைபெறும். திருப்பரங்குன்றம் வேளாண்மை உதவி இயக்குநர் உமாமகேஸ்வரி கருத்துரை வழங்க உள்ளார். இதில் மதுரை மாவட்ட உழவர்கள் மற்றும் தொழில் முனைவோர் கலந்து கொள்ளலாம். மேலும் விவரங்களுக்கு 9486486668 என்ற செல்லிடப் பேசியில் தொடர்பு கொள்ளுமாறு அவர் அதில் தெரிவித்துள்ளார்.

## பிற பகுதிகளிலிருந்து வரும் பலாப் பழங்களால் சிறுமலை பழங்கள் விற்பனை பாதிப்பு

கேரளம், புதுக்கோட்டை உள்ளிட்ட பகுதிகளிலிருந்து கொண்டுவரப்படும் பலாப் பழங்களால், சிறுமலை பழங்கள் தனித் தன்மையை இழந்து வருகின்றன.

திண்டுக்கல் மாவட்டம், சிறுமலையில் பலாவும், வாழையும் அதிக அளவில் சாகுபடி செய்யப்படுகின்றன. கடல் மட்டத்திலிருந்து சுமார் 1500 மீட்டர் உயரத்தில் அமைந்துள்ள சிறுமலையின், தட்ப வெப்ப நிலை, மண் வாகு ஆகியவற்றினால், அங்கு விளையும் பழங்களில் கூடுதல் சுவை இருப்பதாக

கூறப்படுகிறது. பலாவை பொருத்தவரை, கஞ்சிக் காய், வரிக்காய் என 2 வகை மரங்கள் சிறுமலையில் உள்ளன. பலா மரங்கள் இல்லாத தோட்டமே இல்லை என்னும் அளவுக்கு, சுமார் 200 ஏக்கரில் பலா மரங்கள் அமைந்துள்ளன. ஒவ்வொரு ஆண்டும் ஆனி, ஆடி, ஆவணி ஆகிய 3 மாதங்கள் சிறுமலை பலாப்பழம் விற்பனைக்கு வருவது வழக்கம். பறிக்கப்படும் பழங்கள், திண்டுக்கல் ரயில் நிலையம் பகுதியில் உள்ள சிறுமலை ஷெட்டில் விற்பனைக்காக கொண்டுவரப்படும். கடந்த சில ஆண்டுகளாக ஆடலூர், பன்றிமலை உள்ளிட்ட பகுதிகளிலிருந்தும், புதுக்கோட்டை மற்றும் கேரளத்திலிருந்தும் பலாக்காய்கள் சிறுமலை ஷெட்டுக்கு கொண்டு வரப்படுகின்றன. இதனால், சிறுமலை பழத்திற்கு போதிய விலை கிடைப்பதில்லை என விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

இதுதொடர்பாக சிறுமலை புதூரைச் சேர்ந்த எஸ்.ராசா கூறியதாவது: சிறுமலை பலாப் பழத்தில் சுளை சிறியதாகவும் சுவை கூடுதலாகவும் இருக்கும். ஆனால், கேரளத்திலிருந்தும், புதுக்கோட்டையிலிருந்தும் கொண்டு வரப்படும் பலா காய்களின் விலை குறைவாக இருப்பதால், சிறுமலை பழத்திற்கும் வியாபாரிகள் குறைந்த விலையே நிர்ணயிக்கின்றனர். மேலும், பிற பகுதியிலிருந்து வரும் காய்களையும் சிறுமலை காய்கள் என கூறி விற்பனை செய்கின்றனர். இதனால், சிறுமலை பழத்தின் பெருமையும், மவுசும் பொதுமக்கள் மத்தியில் குறைந்து வருகிறது.

விவரம் அறிந்தவர்கள், சிறுமலைக்கே வந்து பழங்களை வாங்கிச் செல்கின்றனர். அதற்காகவே, சாலையோரங்களில் தாற்காலிகமாக கடைகள் அமைத்து விற்பனை செய்யப்படுகிறது என்றார்.

## பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் ரூ.1 கோடிக்கு பருத்தி கொள்முதல்

தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசம் ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்தில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற பருத்தி பஞ்சு மறைமுக ஏலத்தில் ரூ. 1 கோடியே 6 லட்சத்து 67 ஆயிரத்து 628-க்கு பருத்தி பஞ்சு கொள்முதல் நடைபெற்றது.

இந்த ஏலத்தில் பாபநாசம் மற்றும் சுற்று வட்டாரப் பகுதிகளை சேர்ந்த 1250 விவசாயிகள் கலந்து கொண்டு 1,775 குவிண்டால் பருத்தி பஞ்சை விற்பனைக்கு கொண்டு வந்திருந்தனர்.

தஞ்சாவூர் விற்பனைக் குழு செயலாளர் மு. ரவி,விற்பனைக் கூட கண்காணிப்பாளர் மு. பிரியா மாலினி, மேற்பார்வையாளர் பா. சங்கர்ராஜா உள்ளிட்டோர் முன்னிலையில் நடைபெற்ற மறைமுக ஏலத்தில் கோயம்புத்தூர், திருப்பூர், கும்பகோணம், செம்பனார்கோவில்,விழுப்புரம், சத்தியமங்கலம் உள்ளிட்ட பகுதிகளை சேர்ந்த வியாபாரிகள் கலந்து கொண்டு ஏலம் எடுத்தனர். இதில் ஒரு குவிண்டால் பருத்தி பஞ்சு அதிகபட்சமாக ரூ. 6199-க்கும், சராசரி விலையாக ரூ. 6011-க்கும், குறைந்தபட்சமாக ரூ. 5299-க்கும் விலை போனது. பருத்தி பஞ்சு அதிக விலைக்கு ஏலம் போனதால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர்.

## "புதிய பயிர்க் காப்பீடு விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் இருக்கும்'

புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டம் விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில் இருக்கும் என்று கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஓ.எஸ். மணியன் தெரிவித்தார்.

வேதாரண்யம் ஊராட்சி ஒன்றியம் செம்போடை, தேத்தாகுடி வடக்கு, தேத்தாகுடி தெற்கு, புஷ்பவனம், பெரிய குத்தகை ஆகிய ஊராட்சிகளில் குறைதீர் முகாம்கள் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது.

இதில் அமைச்சர் ஓ.எஸ். மணியன் பங்கேற்று, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக்கொண்டு பேசியது:

புதிய பயிர்க் காப்பீட்டுத் திட்டத்தில், விதைப்பு பொய்த்தல், நடவு செய்ய இயலாத நிலை, விதைப்பு முதல் அறுவடை காலம் வரையில் ஏற்படும் அனைத்து வகையான பாதிப்புகளுக்கும் இழப்பீடு பெற முடியும்.

இத் திட்டத்துக்கு ரூ. 500 கோடியை தமிழக அரசு மானியமாக வழங்குகிறது என்றார்.

முகாம்களில், முதியோர் உதவி கோரி மனுக்கள் அளித்த சிலர் விண்ணப்பங்களை சரியாக பூர்த்தி செய்யாமல் அளித்தனர். அதனை அமைச்சரும், மக்களவை

உறுப்பினரும் பூர்த்தி செய்ததோடு, விண்ணப்பதாரர்களது அங்க மச்ச அடையாளங்களையும் பார்த்து எழுதி அதிகாரிகளிடம் அளித்தனர்.

நிகழ்ச்சிகளில், நாகை தொகுதி மக்களவை உறுப்பினர் கே. கோபால், வட்டாட்சியர் பா. இளங்கோவன், ஒன்றியக்குழுத் தலைவர் சுசீலாதேவி சரவணன், மாவட்ட ஊராட்சி உறுப்பினர்கள் சண்முகராஜ், ரவிச்சந்திரன், ராஜகுமாரி அய்யப்பன், ஒன்றியச் செயலாளர் இரா. கிரிதரன், நகரச் செயலாளர் எஸ்.எம். எழிலரசு, அதிமுக நிர்வாகிகள் சரவணன், ராதாகிருஷ்ணன், அம்பிகாதாஸ், பசுபதி உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

## குமரி மாவட்டத்தில் மழையின் தீவிரம் தணிந்ததால் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்தது: பேச்சிப்பாறை அணை மீண்டும் திறப்பு

குமரி மாவட்டத்தில் மழையின் தீவிரம் தணிந்துள்ள நிலையில் அணைகளுக்கு நீர்வரத்தும் குறைந்துள்ளது.

குமரி மாவட்டத்தில் தென்மேற்குப் பருவமழை கடந்த ஜூன் மாதத் தொடக்கத்தில் தீவிரமாகப் பெய்தது. தொடர்ந்து கனமழை இல்லாவிட்டாலும் சாரல் நீடித்தது. இந்நிலையில், கடந்த சில நாள்களாக மாவட்டத்தில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நீடிக்கிறது. இதனால் அணைகளுக்கு நீர்வரத்து குறைந்துள்ளது. பிரதான அணையான பேச்சிப்பாறை உள்ளிட்ட அணைகளில் கடந்த ஆண்டு இறுதியில் குறிப்பிட்ட அளவுக்கு மேல் தண்ணீர் இருப்பு இருந்ததால், தற்போது மழையின் அளவு குறைந்தபோதிலும் அணைகளில் நீர்இருப்பு திருப்திகரமான அளவில் உள்ளது.

பேச்சிப்பாறை அணை மீண்டும் திறப்பு: பேச்சிப்பாறை அணையிலிருந்து கடந்த ஜூன் முதல் வாரத்தில் பாசனத்துக்காக தண்ணீர் திறக்கப்பட்டது. பின்னர், நீர்மேலாண்மை நடவடிக்கையின்படி, இந்த அணை மூடப்பட்டு பெருஞ்சாணி அணையிலிருந்து பாசனத்துக்கு தண்ணீர் எடுக்கப்பட்டது.

இந்நிலையில், பாசனப் பகுதிகளில் தண்ணீர் தேவை அதிகரித்துள்ளதால் சனிக்கிழமை முதல் மீண்டும் பேச்சிப்பாறை அணை திறக்கப்பட்டுள்ளது. பேச்சிப்பாறை அணைக்கு ஞாயிற்றுக்கிழமை காலை நிலவரப்படி விநாடிக்கு 202

கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிருந்து விநாடிக்கு 401 கன அடி தண்ணீர் திறக்கப்பட்டிருந்தது. பெருஞ்சாணி அணைக்கு விநாடிக்கு 240 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. 411 கனஅடி தண்ணீர் திறந்துவிடப்பட்டிருந்தது.

சிற்றாறு பட்டணம்கால் திறக்கப்படவில்லை: மாவட்டத்தில் பிரதான அணைகளான பேச்சிப்பாறை மற்றும் பெருஞ்சாணி அணைகள் திறக்கப்பட்டபோதிலும், சிற்றாறு அணைகள் இதுவரை திறக்கப்படவில்லை. இதனால் பட்டணம்கால் பாசனப் பகுதிகளுக்கு தண்ணீர் கிடைக்காத நிலை ஏற்பட்டுள்ளது.

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### பாலாற்றுப் பழமொழி

'நாலாறு கூடினால் பாலாறு' என்பது தமிழகத்தில் வழங்கி வரும் பழமொழி. ஜவ்வாது மலையில் இருந்து உருவாகும் செய்யாறு, அதே மலையில் பீமன் அருவியாக விழும் பீம ஆறு, மிருகண்ட மலையில் இருந்து வரும் மிருகண்ட ஆறு, செண்பகத் தோப்பு அணையில் இருந்து வரும் கமண்டலநாக நதி ஆகிய 4 துணையாறுகள் பாலாற்றில் இணைந்து, வயலாறு எனுமிடத்தில் வங்கக்கடலில் கலக்கிறது. அதனால் தான் 'நாலாறு கூடினால் பாலாறு' என்ற பழமொழி வந்தது. செய்யாறு நதி பாயும் ஊருக்கே 'செய்யாறு' என்ற பெயர் வந்தது.

### கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பால் விவசாயிகள் மகிழ்ச்சி

கிருஷ்ணகிரி: கிருஷ்ணகிரி அடுத்த கே.ஆர்.பி., அணைக்கு நீர் வரத்து அதிகரித்துள்ளதால், பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை மூலம் பெரியமுத்தூர், அவதானபட்டி, சந்தாபுரம், மலையாண்டஅள்ளி, தேர்பட்டி, பாளேகுளி, பென்னேஸ்வரமடம், கால்வேஅள்ளி, காவேரிப்பட்டணம், பையூர் மற்றும் இதை சுற்றியுள்ள கிராமங்களில் உள்ள, 10 ஆயிரம் ஏக்கர் பாசனம் பெறுகிறது. கே.ஆர்.பி., அணையின் மொத்த

நீர்மட்டமான, 52 அடியில், 47 அடி தண்ணீர் தேங்கியதும், சாகுபடிக்கு தண்ணீர் திறந்து விடப்படும்.

வழக்கமாக, முதல் போக நெல் சாகுபடிக்கு ஆகஸ்ட் முதல் வாரத்தில் தண்ணீர் திறந்து விடப்படும். இந்நிலையில் கே.ஆர்.பி., அணை பாசன பகுதியில் உள்ள சில விவசாயிகள், கிணற்று பாசனம் மூலம் ஏற்கெனவே, நாற்று விட்டு வைத்துள்ளனர். கே.ஆர்.பி., அணையின் நீர் பிடிப்பு பகுதிகளில் கன மழை பெய்யும் போது, அணைக்கு நீர் வரத்து அதிகரிக்கும். கடந்த, இரண்டு நாட்களுக்கு முன்பு கே.ஆர்.பி.,அணைக்கு நீர் வரத்து வெறும், 12 கன அடியாக இருந்தது. நேற்று முன்தினம் இரவு ஆற்று நீர்பிடிப்பு பகுதியில் நல்ல மழை பெய்ததால், நேற்று காலை அணைக்கு நீர் வரத்து, 195 அடியாக இருந்தது. அணையின் நீர்மட்டம், 40.80 அடியாக உயர்ந்துள்ளது. இதனால் அணை பாசன பகுதி விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். இனி வரும் நாட்களில் கர்நாடகா மாநிலம் பெங்களூரு சுற்றுவட்டார பகுதியில் நல்ல மழை பெய்ய வாய்ப்புள்ளதால், அணைக்கு நீர்வரத்து தொடர்ந்து அதிகரிக்கும் என, பொதுப்பணித்துறை உதவி செயற்பொறியாளர் சாம்ராஜ் கூறினார்.

## வெள்ளாடு வளர்ப்பு பயிற்சி: விவசாயிகளுக்கு அழைப்பு

ஈரோடு: ஈரோடு, வீரப்பன்சத்திரத்தில் உள்ள கால்நடை மருத்துவ பல்கலைக்கழக பயிற்சி மற்றும் ஆராய்ச்சி மையத்தில் வரும், 19, 20 ஆகிய தேதிகளில், 'வெள்ளாடு வளர்ப்பு' குறித்த இலவச பயிற்சி முகாம் நடக்க உள்ளது. இதுகுறித்து விரிவான பாடங்கள், கலந்துரையாடல், வீடியோ படக்காட்சி மற்றும் கேள்வி - பதில் பகுதியும் இடம் பெறும். பயிற்சியில் பங்கேற்க விரும்புவோர், நேரில் அல்லது அலுவலக தொலைபேசி, 0424-2291482 என்ற எண்ணில் தொடர்பு கொள்ள வேண்டும். ஈரோடு மற்றும் சுற்றுப்புற மாவட்ட விவசாயிகள், பண்ணையாளர்கள், மகளிர் குழுவினர் இதில் பங்கேற்று பயன்பெறலாம், என அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

## கோபியில் 2 வது நாளாக மழை

கோபி: கோபியில், இரண்டாவது நாளாக நேற்றும் மழை பெய்தது. கோபி, கரட்டூர் முதல் கரட்டடிபாளையம் வரை நேற்று மாலை, 3 மணி முதல் வானம் மேக மூட்டத்துடன் காணப்பட்டது. இந்நிலையில், 3.30 மணிக்கு தூறலுடன் தொடங்கிய மழை, படிப்படியாக வலுக்க தொடங்கியது. கனமழையால் கீரிப்பள்ளம் ஓடையில் வெள்ளம் பெருக்கெடுத்தது. இதில் ஓடையை ஆக்கிரமித்திருந்த ஆகாயத்தாமரை செடிகள், மழை நீரில் அடித்து செல்லப்பட்டன. இதேபோல் ஜே.ஜே., நகர், புதுப்பாளையம், பாரியூர் பிரிவு, கச்சேரிமேடு, ல.கள்ளிப்பட்டி பிரிவு, கரட்டூர், கரட்டடிபாளையம் ஆகிய பகுதிகளில், அரை மணி நேரம் மழை கொட்டியது. கோபியில் தொடர்ந்து, 2வது நாளாக நேற்றும் மழை பெய்ததால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்தனர்.

* இதேபோல் புன்செய்புளியம்பட்டியில், நேற்று மதியம், 3 மணிக்கு லேசாக தூறலுடன் துவங்கிய மழை, 4 மணி வரை கனமழையாக கொட்டியது. காற்றில்லாமல் அமைதியாக பெய்ததால், வெப்பம் தணிந்து குளிர்ச்சி ஏற்பட்டது. ஆடிப்பட்டத்தில் சாகுபடி செய்ய காத்திருந்த விவசாயிகள், இந்த மழையால் மகிழ்ச்சி அடைந்தனர். கோவை சாலை, வாரச்சந்தை பகுதிகளில் தாழ்வான பல இடங்களில் மழை நீர் தேங்கியதால், வாகன ஓட்டிகள் அவதிக்கு ஆளாகினர்.

## விவசாய நிலங்களில் சாய துணிகளை உலர வைப்பதால் மலட்டுத்தன்மை ஏற்பட வாய்ப்பு

ஈரோடு: ஈரோடு, காலிங்கராயன் பாசன பகுதி விவசாய நிலங்களில், சாய துணிகள் உலர வைக்கப்படுகின்றன.

தேசிய அளவில், ஜவுளி உற்பத்தியில் ஈரோடு முக்கிய பங்கு வகிக்கிறது. இதில், துணிகளுக்கு சாயமிடுவது முக்கியம். ஈரோட்டில் பல டையிங் யூனிட்கள் செயல்படுகின்றன. பல சாய ஆலைகள் மற்றும் பிளீச்சிங் யூனிட்கள், இரவு நேரத்தில் காவிரி ஆற்றில் சாய துணிகளை அலசுகின்றனர். இதனால், காவிரி நீர் மாசடைவதுடன், அதில் வாழும் மீன்களும் இறக்கின்றன. மேலும், இரவோடு

இரவாக காவிரி ஆற்றை அடுத்துள்ள, காலிங்கராயன் பாசன பகுதி விவசாய நிலங்களில் துணிகள் உலர வைக்கின்றனர்.

இது குறித்து, காலிங்கராயன் பாசன பகுதி விவசாயிகள் கூறியதாவது: தற்போது, காலிங்கராயன் வாய்க்காலில் தண்ணீர் திறந்து விடப்படாததால், இப்பகுதி விவசாயிகள் பயிர் செய்யவில்லை. இதை பயன்படுத்தி, டையிங் யூனிட் மற்றும் சாய பட்டறையினர், விவசாய நிலங்களில், அலசிய சாய துணிகளை உலர வைக்க பயன்படுத்துகின்றனர். இதனால், நிலம் மலட்டு தன்மை ஏற்பட வாய்ப்பு உள்ளது. துணி அலசுவோர் மீது, அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு அவர்கள் கூறினர்.

## நுண்ணீர் பாசனம் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி

வத்தலக்குண்டு: செங்கட்டாம்பட்டியில் விவசாயிகளுக்கு நுண்ணீர் பாசன முறை மற்றும் பராமரிப்பு பயிற்சி நடந்தது.
வத்தலக்குண்டு ஒன்றிய வேளாண் அலுவலகம் சார்பில் நடந்த பயிற்சிக்கு வேளாண் உதவி இயக்குநர் கோபால்ராஜ் தலைமை வகித்தார். வேளாண் இளநிலை பொறியாளர் முத்துப்பாண்டி நுண்ணீர், தெளிப்பு நீர் பாசனத்தின் செயல்பாடுகள் குறித்து விளக்கினார். தென்னை, காய்கறி, மலர்களுக்கு அமைக்கப்படும் பாசன முறைகள், திட்டங்கள், மானியங்கள்,
உரங்கள் பயன்பாடு, கையாளும் முறைகள்,
தெளிப்பான்கள் மூலம் 60 சதவீதம் நீர் சேமிப்பு, வேலையாட்கள் சேமிப்பு பற்றியும் எடுத்துரைக்கப்பட்டது. நிழல்வலை, பசுமைகுடில் பயிர் சாகுபடியில் நவீன தொழில் நுட்பங்கள் குறித்து அறிவிக்கப்
பட்டது. அட்மா திட்ட அலுவலர்கள் ஏற்பாடுகளை செய்திருந்தனர்.

## ஆத்தூர் தேங்காய்களுக்கு 'மவுசு' தொழிலாளர்களுக்கு ஜீவாதாரம்

ஆத்தூர்: ஆத்தூர் தேங்காய்களுக்கு உள்ள 'மவுசு' காரணமாக,இப்பகுதியில் தென்னை
தொழிலாளர்களுக்கு ஜீவாதாரமாக விளங்குகிறது.

மேற்கு தொடர்ச்சி மலையடிவார பகுதியான ஆத்தூர் காமராசர் நீர்த்தேக்கம்,

திண்டுக்கல் மாநகராட்சியின் முக்கிய குடிநீர் ஆதாரமாக உள்ளது. இது தவிர, இப்பகுதியின் நிலத்தடி நீர்மட்டத்திற்கும் முக்கிய பங்கு வகிக்கிறது. இதற்கேற்ப

ஆத்தூர்,அய்யம்பாளையம், பட்டிவீரன்பட்டி, சித்தரேவு, சித்தையன்கோட்டை,

மல்லையாபுரம், தருமத்துப்பட்டி பகுதிகளில்,
நெல்லுக்கு இணையாக தென்னை சாகுபடியும் நடக்கிறது.

ஆண்டுக்கு 3 முறை, மரங்களில் இருந்து தேங்காய் பறிக்கின்றனர். தேங்காய்கள்

மட்டை உரிக்கப்பட்டு, ஓட்டல், தனியார் எண்ணெய் நிறுவனங்களுக்கு
விற்பனைக்கு அனுப்பப்படுகிறது. இந்த மட்டை உரிக்கும் தொழிலை மட்டுமே ஜீவாதாரமாக
கொண்டு ஏராளமான குடும்பங்கள் உள்ளன.

மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து வரும் இத்தொழிலாளர்கள், 'சீசன்' காலங்களில் ஆத்தூர் பகுதியில் முகாமிடுகின்றனர். இப்பகுதி கிராமங்களில் தலா

40 பைசா கூலி
அடிப்படையில் இப்பணியில்ஈடுபடுகின்றனர்.

வறட்சி காலத்திலும், வருவாய் பார்க்க ஆத்தூர் தேங்காய்களே காரணம்

என்கின்றனர். தொழிலாளர்கள் சிலர் கூறுகையில், 'கேரள தேங்காய்க்கு

அடுத்ததாக, ஆத்தூர் தேங்காய்களின் பருமன், சுவை போன்றவற்றால் அதிக மவுசு உள்ளது.

நான்கு ஆண்டுகளுக்கு முன் மழையின்றி தென்னை, பனை மரங்கள்

காய்ந்தபோதும், இப்பகுதியில் தேங்காய் உற்பத்தி தொடர்ந்தது. காங்கேயம்,

வெள்ளக்கோவில், பெருந்துறை, ஈரோடு பகுதிகளுக்கு அனுப்பப்பட்டு வருகிறது.

குறைந்த கூலியாக இருப்பினும், நாளொன்றுக்கு 2 ஆயிரம் காய்கள் வரை உரிப்பதால் கணிசமான வருவாய் கிடைக்

கிறது. விலைவாசி உயர்விற்கேற்ப கூலி அதிகரிப்பை எதிர்பார்க்கிறோம்' என்றனர்.

## தழை உர பயிரினை வேளாண் அதிகாரி பார்வை

அவலூர்பேட்டை: மேல்மலையனூர் வட்டத்தில் தழை உரபயிரினை வேளாண் உதவி இயக்குனர் பார்வையிட்டார்.

மேல்மலையனூர் வட்டம், செக்கடிக்குப்பம் கிராமத்தில் கப்பலோட்டியதமிழன் எனும் விவசாயி பயிரிடப்பட்ட தக்கை பூண்டு தழை உர பயிரினை வேளாண் உதவி இயக்குனர் பெரியசாமி பார்வையிட்டார்.

பின்னர், தழை உர பயிரினை சாகுபடி செய்யும் விவசாயிகளை ஊக்குவிக்கும் வகையில், அரசு வழங்கும் மானியம் குறித்து விளக்கினார்.
அவருடன் வேளாண் உதவி அலுவலர் ரகுபதி மற்றும் விவசாயிகள் உடனிருந்தனர்.

## பலத்த மழையால் விவசாயிகள் மகிழ்ச்சி

ஆத்தூர்: ஆத்தூர் மற்றும் சுற்றுவட்டார பகுதிகளில், நேற்று இரவு, 7 மணி முதல், சூறாவளி காற்றுடன், பலத்த மழை பெய்தது. அதனால், சாலை, தெருக்களில் மழைநீர் வழிந்தோடியது. நேற்று முன்தினம், ஆத்தூர், தலைவாசல் பகுதிகளில், கனமழை பெய்தது. ஆடி மாதம் துவங்கி, தொடர்ந்து மழை பெய்வதால், விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். மேலும், ஆடிபட்டத்தில், பயிர் சாகுபடி செய்வதற்கான பணிகளில், அவர்கள் ஈடுபட்டுள்ளனர்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### முதுமலை அருகே கண்களை கொள்ளை கொள்ளும் சூரியகாந்தி மலர் சாகுபடி



உதகை: முதுமலை அருகே உள்ள விவசாயிகள் கண்களை கொள்ளை கொள்ளும் சூரியகாந்தி மலர் சாகுபடியில் அதிக அளவில் ஈடுபட்டுள்ளனர். கர்நாடக மாநில பந்திப்பூர் தேசிய பூங்காவை ஒட்டிய அங்கலா கிராமத்தில் உள்ள விவசாயிகளே இந்த சாகுபடியில் ஈடுபட்டுள்ளனர். தோட்டத்தில் உள்ள அனைத்து பூக்களுமே அறுவடைக்கு தயார் நிலையில் உள்ளது. இந்நிலையில் உதகை - மைசூர் தேசிய நெடுஞ்சாலையில் பயணிக்கும் சுற்றுலா பயணிகள் மலர்களால் அதிகளவில் கவரப்பட்டு வருகை தந்த வண்ணம் உள்ளனர்.

இந்த மலர் விதைகளில் இருந்து சூரியகாந்தி எண்ணெய் தயாரிக்கப்படுகிறது. இதனால் குவிண்டால் ஒன்றுக்கு ரூ.4 ஆயிரம் முதல் ரூ.6 அயிரம் வரை கிடைப்பதால் இதனை பயிரிட விவசாயிகள் அதிகளவு ஆர்வம் காட்டி

வருகின்றனர். இந்த சாகுபடி விவசாயிகளுக்கு விவசாயமாக இருந்தாலும் சுற்றுலா பயணிகளுக்கு மலர் கண்காட்சியாக இருப்பது குறிப்பிடத்தக்கது.

## திருவட்டார் அருகே ஒன்றரை அடி உயரத்தில் குலை தள்ளிய அதிசய வாழை



**குலசேகரம் :** திருவட்டாரை அடுத்த செவரகோடு பகுதியை சேர்ந்தவர் ஆல்பன். குமரி மேற்கு மாவட்ட தமாகா பொதுச்செயலாளர். இவரது வீட்டோடு சேர்ந்த இடத்தில் வாழை விவசாயம் செய்து வருகிறார். இவரது தோட்டத்தில் சுமார் 5 அடி உயரத்திற்கு மேல் வளர்ந்த வாழைகள் தான் குலை தள்ளிய நிலையில் உள்ளன. இதில் மட்டி வாழை கூட்டமாக நிற்கும் இடத்தில் வாழைக்கன்று ஒன்று சுமார் ஒன்றரை அடி உயரம் வளர்ந்த நிலையில், திடீரென பூ விரிந்து இரண்டு சீப் காய்களுடன் குலை தள்ளிய நிலையில் உள்ளது. சாதாரணமாக மட்டி வாழைகள் அதிக உயரத்தில் வளரக் கூடியவை. இந்த நிலையில் ஒன்றரைஅடி உயரத்தில் வாழை குலை தள்ளிய அதிசயத்தை அப்பகுதி மக்கள் பார்த்து வியந்தனர்.

## குறைந்த செலவு, அதிக லாபம் இருந்தும் கண்டுகொள்ளாமல் போனகாளான்வளர்ப்பு



திண்டுக்கல் : குறைந்த செலவு, அதிக லாபம் இருந்தும் திண்டுக்கல் மாவட்டத்தில் காளான் வளர்ப்பு தொழிலில் அரசின் வேளாண், தோட்டக்கலை துறைகள் அக்கறை காட்டவில்லை என புகார் எழுந்துள்ளது. காளான் வகைகள் லட்சக்கணக்கில் உள்ளன. எனினும் சுமார் 20 வகைகள் மட்டுமே உணவுப்பொருளாகப் பயன்படுத்தக்கூடியவை ஆகும். திண்டுக்கல் மாவட்டத்தின் தட்ப வெப்பநிலை காளான் வளர்ப்புக்கு மிக மிக ஏற்றதாகும். வகைகளுக்கு ஏற்ப இரண்டு அல்லது மூன்று வாரம் அல்லது ஒன்றரை மாதத்தில் காளான் பறிக்கப்படுகிறது. ஒரு கிலோ காளானின் தற்போதைய விலை ரூ.300 ஆகும். விதை, வைக்கோல் மற்றும் பராமரிப்புச் செலவுகள் ரூ.30க்குள் முடிகிறது. சிப்பி வகை காளான் மழைக்காலங்களிலும் பால்வகை காளான் வெயில் காலங்களிலும் நன்கு விளையக் கூடியது. இந்தக் காளான் வளர்ப்பில் பெரிய அளவில் பராமரிப்பு தேவைப்படாதததால் மிகவும் லாபகரமானதாகும்.

ராமநாதபுரம் உள்ளிட்ட மற்ற மாவட்டங்களில் காளான் வளர்ப்பு குறித்து விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகின்றனர். இதனால் அந்த மாவட்டங்களில் ஏராளமான விவசாயிகள் காளான் வளர்ப்பில் ஈடுபடுகின்றனர். மேலும் நவீன இயந்திரங்களைப் பயன்படுத்தி காளானை பதப்படுத்துதல்

உள்ளிட்ட பல்வேறு முயற்சிகள் அங்கு செய்யப்படுகின்றன. ஆனால் திண்டுக்கல் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு லாபத்தை அள்ளித்தரும் காளான் வளர்ப்பின் முக்கித்துவம் குறித்து அரசின் வேளாண், தோட்டக்கலை துறைகள் கண்டுகொள்ளவில்லை. இதுகுறித்து காளான் வளர்ப்பில் ஈடுபட்டுள்ள ஒருவர் கூறுகையில், "திண்டுக்கல் மாவட்டத்தில் குறிப்பிட்ட சில பகுதிகளில் மட்டுமே விவசாயம் செழிப்பாக உள்ளது. மற்ற இடங்களில் எல்லாமல் விவசாயம் நலிவடைந்து வருகிறது.

இதற்கு போதிய லாபமில்லை என்பதே முக்கிய காரணமாகும். விவசாயிகள் மற்ற பயிர்கள் செய்வதோடு காளான் வளர்ப்பிலும் ஈடுபட்டால் நல்ல லாபம் ஈட்டலாம். இதை வலியுறுத்தியே ராமநாதபுரம் உள்ளிட்ட பல மாவட்டங்களில் விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. தற்போது அந்த முயற்சிக்கு விவசாயிகள் மத்தியில் நல்ல வரவேற்பு உள்ளது. இதனால், விவசாயத்தில் ஏற்படும் இழப்பு உள்ளிட்ட பாதிப்பிலிருந்து ஏராளமானோர் மீண்டுள்ளனர். ஆனால் இங்கு எவ்வித முயற்சியும் செய்யவில்லை. காய்கறிகளிலேயே காளானில் தான் அதிகமாக புரோட்டீன் உள்ளது. தற்போது காளான், உணவிற்குப் பயன்படுவதைவிட மருத்துவத்திற்கு அதிகமாகப் பயன்படுத்தப்படுகிறது. அதிகத் தேவையிருந்தும் போதுமான உற்பத்தி இல்லை. இதற்கு விவசாயிகளிடம் விழிப்புணர்வு இல்லாததே காரணம். விழிப்புணர்வை ஏற்படுத்தி, நவீன முறையைப் பயன்படுத்தி அதிக அளவில் காளான் உற்பத்தி செய்ய வங்கிகள் மூலம் கடன் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்றார்.

## திருச்செங்கோட்டில் விவசாயிகளுக்கு கிராம அடிப்படை பயிற்சி வகுப்பு

நாமக்கல் : திருச்செங்கோடு அருகேயுள்ள எ.இறையமங்கலத்தில் விவசாயிகளுக்கான கிராம அடிப்படை பயிற்சி வகுப்பு இன்று (18ம்தேதி) காலை 10 மணிக்கு நடக்கிறது. இதில் வேளாண்மைத்துறை, தோட்டக்கலைத்துறை, கால்நடைத்துறை, வேளாண் பொறியியல்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம் உள்ளிட்ட துறையை சேர்ந்த அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கின்றனர். விருப்பம் உள்ள விவசாயிகள், இதில் பங்கேற்கலாம் என நாமக்கல் உழவர் பயிற்சி நிலைய துணை இயக்குனர் சுப்பையா தெரிவித்துள்ளார்.

## ஆட்கள் பற்றாக்குறையால் நெல் நடவு பணியில் இயந்திர பயன்பாடு வேளாண்துறை செயல்விளக்கம்

காவேரிப்பட்டிணம் : காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் 1000 ஏக்கரில் நெல் சாகுபடிக்கு இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள நிலையில், ஆட்கள் பற்றாக்குறையால் நடவு பணிக்கு இயந்திர பயன்பாட்டிற்கு வேளாண்துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இதுகுறித்து செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. கிருஷ்ணகிரி மாவட்ட வேளாண்மை துறை மூலம் தேசிய வோளாண் அபிவிருத்தி திட்டத்தின் கீழ், நெல் இயந்திர நடவு மேற்கொள்ளும் விவசாயிகளுக்கு எக்டருக்கு ரூ.5000 வீதம் பின் ஏற்பு மான்யம் வழங்கப்பட உள்ளது.

காவேரிப்பட்டணம் வட்டாரத்தில் நடப்பு நிதி ஆண்டில் 1000 எக்டர் பரப்பில் இயந்திரம் மூலம் நெல் நாற்று நடவு பணி மேற்கொள்ள இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது. வேலையாட்கள் பற்றாக்குறையினால் நடவுப்பணி பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, இயந்திரம் மூலம் நாற்று நடவு பணிக்கு வேளாண் துறை நடவடிக்கை எடுத்துள்ளது. இதன்மூலம் அதிக பரப்பளவில் நாற்று நடுவதால் 10 முதல் 20 சதம் வரையிலும் கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்புள்ளது.

ராமாபுரம் கிராமத்தைச் சேர்ந்த விவசாயி கணேசன் வயலில் நெல் இயந்திர நடவுப்பணிக்கான செயல்விளக்கம் செய்து காண்பிக்கப்பட்டது. மாவட்ட வேளாண்மை துணை இயக்குநர் திருமுருகு முன்னிலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் வேளாண்மை துணை இயக்குநர் (மாநில திட்டம்) ரவீந்தர், வேளாண்மை உதவி இயக்குநர் (தரக்கட்டுப்பாடு) ராஜேந்திரன் மற்றும் வட்டார வேளாண்மை உதவி இயக்குநர் சங்கரலிங்கம், விவசாய சங்க தலைவர் ராமு கவுண்டர் மற்றும் சுற்று வட்டார விவசாயிகள் கலந்து கொண்டனர். ஏற்பாடுகளை காவேரிப்பட்டணம் வேளாண்மை அலுவலர் செந்தில் மற்றும் உதவி வேளாண்மை அலுவலர்கள் ராமசாமி, நாகராஜன், சுரேஷ் மற்றும் பழனிசாமி ஆகியோர் செய்திருந்தனர்.

## தனியார் விதை விற்பனையாளர்களுக்கு பயிற்சி

திருச்சி,  திருச்சி மாவட்டத்தில் தனியார் விதை விற்பனையாளர்களுக்கான பயிற்சி மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. இப்பயிற்சியில் விதை ஆய்வு துணை இயக்குனர் திருச்சி முகமது அப்துல் நசீர் தனியார் விதை விற்பனை நிலையங்களில் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பட்டியலின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

திருச்சி விதைச்சான்று உதவி இயக்குனர் ரவி, விதை உற்பத்தியில் தனியார் நிறுவனங்களின் பங்கு மற்றும் விதை சான்று துறையின் பங்கு குறித்து விளக்கினார். கரூர் வேளாண் அலுவலர் தாகூர், விதை பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படும் விதை பரிசோதனை முறைகள் பற்றியும், அதன் அவசியத்தையும் தெரிவித்தார்.

திருச்சி விதை ஆய்வாளர் அறிவழகன், தனியார் விதை விற்பனை நிலையங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், விதைச்சட்ட அமலாக்கம் மற்றும் விற்பனை நிலையங்களில் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் குறித்து பேசினார். நிறைவாக விதை ஆய்வாளர் மோகன்தாஸ் நன்றி கூறினார்.

## தனியார் விதை விற்பனையாளர்களுக்கு பயிற்சி

திருச்சி,  திருச்சி மாவட்டத்தில் தனியார் விதை விற்பனையாளர்களுக்கான பயிற்சி மாவட்ட வேளாண் இணை இயக்குனர் அலுவலகத்தில் நடந்தது. இப்பயிற்சியில் விதை ஆய்வு துணை இயக்குனர் திருச்சி முகமது அப்துல் நசீர் தனியார் விதை விற்பனை நிலையங்களில் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் மற்றும் விவசாயிகளுக்கு வழங்கப்படும் பட்டியலின் அவசியத்தை எடுத்துரைத்தார்.

திருச்சி விதைச்சான்று உதவி இயக்குனர் ரவி, விதை உற்பத்தியில் தனியார் நிறுவனங்களின் பங்கு மற்றும் விதை சான்று துறையின் பங்கு குறித்து விளக்கினார். கரூர் வேளாண் அலுவலர் தாகூர், விதை பரிசோதனை நிலையங்களில் மேற்கொள்ளப்படும் விதை பரிசோதனை முறைகள் பற்றியும், அதன் அவசியத்தையும் தெரிவித்தார்.

திருச்சி விதை ஆய்வாளர் அறிவழகன், தனியார் விதை விற்பனை நிலையங்களில் கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள், விதைச்சட்ட அமலாக்கம் மற்றும் விற்பனை நிலையங்களில் பராமரிக்க வேண்டிய பதிவேடுகள் குறித்து பேசினார். நிறைவாக விதை ஆய்வாளர் மோகன்தாஸ் நன்றி கூறினார்.

**பசுந்தாள் உரப்பயிர் சாகுபடிக்கு மானியம்**

திருச்சி,: தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் பசுந்தாள் உரப்பயிர்கள் சாகுபடிக்கு மானியம் வழங்கப்பட உள்ளன. திருச்சி மாவட்டத்தில் நடப்பு ஆண்டு தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் கீழ் மண் வளத்தினை பெருக்கிட பசுந்தாள் உரப்பயிர்களை சாகுபடி செய்து மண்ணில் மடக்கி உழுது நெற்பயிர் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு ஒரு எக்டருக்கு அதிகபட்ச மானியம் ரூ1,500 வீதம் பின்னேற்பு மானியமாக 2,400 எக்டருக்கு வழங்கப்படவுள்ளது. இத்திட்டம் திருச்சி மாவட்டத்தின் அனைத்து வட்டாரங்களிலும் தேசிய வேளாண் வளர்ச்சி திட்டத்தின் மூலம் செயல்படுத்தப்படவுள்ளது.

விவசாயிகள் தரமான பசுந்தாள் உரப்பயிர்களான தக்கை பூண்டு, சணப்பு ஆகியவற்றின் விதைகளை ஒரு எக்டருக்கு 50 கிலோ வீதம் விதை விற்பனை நிலையங்களிலிருந்து பெற்று வயலில் விதைத்து அதற்கான பட்டியல், வங்கி விபரம், பசுந்தாள் சாகுபடி செய்யப்பட உள்ள வயலின் புகைப்படம் மற்றும் விண்ணப்பத்தினை சம்மந்தப்பட்ட வட்டார வேளாண் உதவி இயக்குநர்களிடம் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

இது குறித்து திருச்சி மாவட்ட வேளாண் இணை இயக்குனர் சந்திரசேகரன் கூறுகையில், பசுந்தாள் உர பயிர்களின் விதைகள் 50 கிலோவிற்கான கொள்முதல் தொகையில் 50 சதம் அல்லது அதிகபட்சமாக எக்டருக்கு ரூ1,500 வீதம் பின்னேற்பு மானியமாக விவசாயிகளின் வங்கி கணக்கில் நேரடியாக வரவு வைக்கப்படும். இத்திட்டத்தில் ஒரு விவசாயி அதிகபட்சமாக இரு எக்டருக்கான மானியத்தை பெறலாம். எனவே இத்திட்டத்தினை பயன்படுத்தி பசுந்தாள் உரப்பயிர்களான தக்கைப்பூண்டு அல்லது சணப்பு பயிர்களை தங்கள் வயலில் சாகுபடி செய்து மண் வளத்தை செறிவூட்டி , ரசாயண தழைசத்து உரங்களின்

தேவையை குறைத்து நெற் பயிரில் அதிக மகசூல் பெற்றிடலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## திருச்சியில் இரவில் பெய்த கனமழை

திருச்சி, : திருச்சியில் நேற்றிரவு 1 மணி நேரம் பெய்த கனமழையால் விவசாயிகள் பொதுமக்கள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர். தமிழகத்தில் மார்ச் மாதம் முதல் ஜூன் மாதத்தின் கடைசி வரை வெயிலின் கொடுமை பொதுமக்களை வாட்டி வதைத்தது. இதில் மே மாதத்தின் வெயிலின் தாக்கமானது 107 டிகிரிக்கு மேல் கொளுத்தியது. கோடை வெயிலில் பொதுமக்கள் தங்களை காத்துக் கொள்ள அரசு மாவட்ட நிர்வாகத்தின் வாயிலாக அறிக்கை விடுத்தது. அந்தளவிற்கு மே மாதத்தில் கொளுத்திய வெயில் பொதுமக்களை வாட்டி வதைத்தது என்றால் மிகையல்ல.

இதே போல திருச்சி மற்றும் சுற்றுவட்டார மாவட்டத்தை சேர்ந்த பகுதிகளிலும் கடுமையான வெயில் தாக்கியது. இதன் காரணமாக பொதுமக்கள் வெளியே வராமல் வீட்டிற்குள் முடங்கி கிடந்தனர். திருச்சி மாநகரின் முக்கிய சாலைகள் வெறிச்சோடி காணப்பட்டது. இந்நிலையில் கடந்த வாரத்தில் ஆடி மாதத்தில் வீசக்கூடிய காற்றின் வேகத்தை போல அனல் காற்று வீசியது.

இந்நிலையில் திருச்சியில் கடந்த வெள்ளிக்கிழமை பலத்த இடி மின்னல் காற்றுடன் அரை மணி நேரம் மழை பெய்தது. இதில் திருச்சி மாநகரத்தின் முக்கிய பகுதிகள் போதிய வடிகால் வசதி இல்லாததால் சாலைகளை ஆக்கிரமித்து இருந்தது. நேற்றும் 1 மணி நேரத்திற்கு பெய்த மழையால் திருச்சியில் வெள்ளம் பெருக்கெடுத்து ஓடியது. சாக்கடை கால்வாயில் பிளாஸ்டிக் உள்ளிட்ட கழிவு பொருட்கள் தேங்கியதால் மழை நீர் வடியாமல் சாலைகளில் குளம் போல தேங்கி நின்றது. இதனால் வாகன ஓட்டிகள் பெரிதும் சிரமத்திற்கு உள்ளாகினர்.

கோடை மழை ஆரம்பிப்பதற்கு முன்பே பெய்த மழையில் திருச்சி மாநகரம் மழை நீரால் சிக்கி தவிப்பதால் பொதுமக்கள் பாதிக்கப்படுகின்றனர். இதனால் கோடை மழைக்கு முன்பு முக்கிய சாக்கடை கால்வாய்களை தூர்வார வேண்டும் என்பதே பொதுமக்களின் எதிர்ப்பாக உள்ளது.

ஆடி பட்டம் தேடி விதை

ஆடி பட்டம் தேடி பார்த்து விதைக்க வேண்டும் என்பது விவசாயிகளின் மந்திரமாக இருப்பதால் ஆடி மாதம் தொடக்கத்தில் மழை பொழிய ஆரம்பித்து இருப்பது விவசாயிகள் மத்தியில் பெரும் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதை தொடர்ந்து விவசாயிகள் தங்களது விவசாய பணிகளை துரிதப்படுத்தி வருகின்றனர்.